# தலைவாசல் Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 125 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | பெப்ரவரி 15, 2021

தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news




## பாடசாலைக்கு பச்சை குத்தி வர அனுமதிக்க வேண்டுமாம்?

### மாணவர்கள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

பாடசாலைக்கு பச்சை குத்தி வர அனுமதிக்கவில்லையென பாடசாலை மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ் - வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 11 பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் சிலரால் துன்புறுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் தரம் 11இல் பயிலும் மாணவன் ஒருவன் உடலில் பச்சை குத்தியுள்ளதாக ஆசிரியர்கள் சிலரால் அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் தரம் 11இல் பயிலும் 70 ஆண் மாணவர்களை பாடசாலை வளாகத்திலுள்ள மறைவான

03

## பாதுகாப்பு இன்றி வடக்கு, கிழக்குக்கு வரவேண்டாம்

### மேர்வின் சில்வாவிற்கு ரவிகரன் எச்சரிக்கை

சரவணன் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களைப் பற்றியோ, இளைஞர்களைப் பற்றியோ மேர்வின் சில்வா பூரணமாக புரிந்துகொள்ளவில்லையென, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்குக்கு வரும் போது, அவர் பாதுகாப்பின்றி வருவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும் எனவும், அவர் கூறினார். பொலிஸ் சீருடையில் தான் இருந்திருந்தால், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்களின் கால்களை

03

## கொரோனாத் தொற்று 14 நாட்களில் 74 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸால் கடந்துள்ள 14 நாட்களில் மாத்திரம் 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் நேற்று வரை 384 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலையின்போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்தனர்.இதன்படி கொரோனாவால் இதுவரை மொத்தமாக 397 பேர் உயிரிழந்துள்ளனர்.

## யாழ். மாநகர முதல்வருக்கு எதிராக மன்னாரில் தொடரப்பட்ட வழக்கு



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் பேரணியில், நீதிமன்ற கட்டளையை மீறி யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கலந்துகொண்டமையினால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு பதில் நீதவான் முன்னிலையில் இன்று (திங்கட் கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தவணையிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலேயே பேரணிக்கு தடைகோரி ஏ அறிக்கையூடாக மன்னார் பொலிஸ் நிலையத்தினால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்று வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, ‘பி’ அறிக்கை ஊடாக பேரணியில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

03

## இலங்கையிலும் ஆட்சி அமைப்போம்!

### பா.ஜா.கவின் கருத்தால் வெடித்தது சர்ச்சை



இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு நேபாளத்திலும் இலங்கையிலும் பாரதிஜனதா அரசாங்கத்தினை அமைக்கும் திட்டமுள்ளது என திரிபுரா முதலமைச்சர் பிப்லாப் டெப் தெரிவித்துள்ள கருத்தினால் தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

03

## கோத்தாவின் இரட்டை முகத்தை இந்தியா புரியவேண்டும்!




இலங்கை சீனர்களின் நிழலின் இருப்பதை விரும்புவதை இந்தியா புரிந்து கொள்ளவேண்டுமென சி.வி.விக்கினேஸ்வரன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஒருபுறம் கோத்தபாய அரசின் அண்மைய நடவடிக்கைகள் ஜெனீவாவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஒரு

03

## வடக்கு மாகாணத்தில் மேலும் 6 பேருக்கு கொரோனா தொற்று!

வடக்கு மாகாணத்தில் மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை பணியாளர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் 377 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் இன்று 416 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

5 பேர் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் ஏற்கனவே

03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# வடக்கு- கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் உருவாகியுள்ளன

வடக்கு- கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் பல உருவாகியுள்ளன என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் நாடு என்ற ரீதியில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கு



வதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் மீண்டும் உருவாகியுள்ளன.

இதேவேளை நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நாட்டின் புலனாய்வு பிரிவு செயலிழந்து காணப்பட்டமையினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

ஆகவேதான் தற்போது புலனாய்வு துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் புலனாய்வு துறை பலப்படுத்துவோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலைக்கு முதல்நாள் சென்ற மாணவன் உயிரிழப்பு

பதுளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 வயது பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பதுளை-அசேலபுர பகுதியை சேர்ந்த சிவனேசன் வருன் பிரதீப் எனும் 6 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் இணைவதற்காக அவருடைய பாட்டி மற்றும் இரட்டை சகோதரருடன் சென்று கொண்டிருந்த வேளையில், கன்டேனர் ரக வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் குறித்த மாணவனுடைய பாட்டியும் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாளை முதல் தடுப்பூசி

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாளை (செவ்வாய்க்கிழமை) தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்றத்தின் படைக்கள சேவிதர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இராணுவ வைத்தியசாலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அஸ்ட்ரா செனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்படுவுள்ளன.

இதேவேளை, மேல் மாகாணத்தில் அதி அபாய வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடியவர்கள், அதிக ஆபத்துள்ள குழுக்கள் மற்றும் பொதுமக்களுடன் நெருக்கமாக பழகும் நபர்களை குறிவைத்து 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# இரணைதீவில் பாரிய கடலட்டை ஏற்றுமதிக் கிராமம்!

கடலுணவு உற்பத்திக்கான கேந்திர மையமாக இரணைதீவு உருவாக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இரணைதீவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கடலட்டை ஏற்றுமதிக் கிராமத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "இரணைதீவு மக்களின் வாழ்கை செழிப்படைய வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்ததுடன், கடலட்டை பண்ணையின் இரண்டாம் கட்டத்திற்காக விண்ணப்பித்துள்ள மேலும் பேருக்கும் பொருத்தமான பிரதேசங்களை அடையாளப்படுத்தி வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், கொடுவா மீன் உற்பத்திப் பண்ணைகளையும் உருவாக்கி எண்ணெய் வளத்தின் கேந்திர நிலையமாக மத்திய கிழக்கு நாடுகள் விளங்குவது போன்று, இலங்கையின் கடலுணவுகளுக்கான கேந்திர நிலையமாக இரணைதீவு பிரதேசம் மாற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சரின் முயற்சியினால் சுமார் 70 மில்லியன் ரூபாய் ஆரம்ப முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இரணைதீவு கடலட்டைக் கிராமத்தின் முதலாவது கட்டத்தில் இரணைதீவை சேர்ந்த 83 இரணைதீவைச் சேர்ந்த பயனாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் தாராளமான சந்தை வாய்ப்பைக் கொண்டுள்ள கடலட்டைகளை நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பதனிட்டு ஏற்றுமதி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள குறித்த பண்ணையின் ஊடாக, சுமார் 300 பேருக்கு நேரடியான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 400 பேர் மறைமுகமாக தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் கூட்டு செயற்பாட்டுப் பொறிமுறை ஊடாக உருவாக்கப்பட்டுள்ள குறித்த பண்ணைக்கான திட்டமிடலின் போது, கணிசமான பலனை இரணைதீவு மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில் இன்றைய நிகழ்வில் உரையாற்றிய தனியார் முதலீட்டாளர்களான சுகத் இன்ரனாஷினல் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அரவிந்தன், குறித்த பண்ணையின் வருமானத்தில் 75 வீதமானவை இரணைதீவு மக்களையே சென்றடையும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஏழு நாட்களில் இலங்கைக்கு மேலும் 5 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள்

இலங்கையில் பொது மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 5 இலட்சம் டோஸ் கொரோனா தடுப்பூசிகள் அடுத்த ஏழு நாட்களில் நாட்டை வந்தடையும் என கொவிட் 19 வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி அடுத்த வாரம் சில நாட்களுக்குள் இதன் முதல் தொகுதி நாட்டை வந்தடையும் என அந்த மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பொது மக்களுக்கு தடுப்பூசி போடும் திட்டம் மார்ச் மாதத்தில் தொடங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனவரி 29ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 349 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒரு இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது!

இலங்கையில் இதுவரையில் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 654 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் நேற்றைய தினம் மாத்திரம் 7 ஆயிரத்து 457 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவும் கியூமெடிக்கா (Humedica) நிறுவனமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் (Personal Protective Equipments) வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஊடகவியலாளர்களுக்கு இந்த தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டன.

இடர் நிலமைகளின் போது தம்முடன் இணைந்து காத்திரமான பங்களிப்பை வழங்கும் ஊடகவியலாளர்களின் சேவையினை கொரோனா வைரஸ் பரவல்





நிலமையில் மேலும் வலுப்படுத்தும் முகமாக இந்த தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பணிப்பாளர், ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

# சுமார் 2500 கிலோ கிராம் கழிவு தேயிலை தூளுடன் இரண்டு பேர் கைது





சுமார் 2500 கிலோ கிராம் கழிவு தேயிலை தூளுடன் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இரண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிபடையினரால் இவர்கள் 15.02.2021 அன்று மதியம் 12 மணியளவில் கொட்ட கலை கொமர்ஷல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கழிவு தேயிலை தூளை அனுமதி பத்திரம் இல்லாமல் கொட்டகலை பகுதி யிலிருந்து கம்பளை பகுதிக்கு கொண்டு செல்லும் போது விசேட அதரடிப் படையினரால் இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ளது.

அதன்பின் கைப்பற்றப்பட்ட கழிவு தேயிலை தூளையும், வாகனத்தையும், சந்தேக நபர்களையும் திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள னர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்ட இருவரையும் அட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக விசேட அதிரடிபடை யினர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாமல் ராஜபக்ஷ உட்பட சிலருக்கு அழைப்பாணை



விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட சிலருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் அழைப் பானை விடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் நிறுவனத்தினத்திற்கு புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரிக்குமாறு தாக்கல் செய்த மனு தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்காக மார்ச் மாதம் 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மேலதிக வகுப்புக்களை நடத்த 23 ஆம் திகதி முதல் தடை



இம்முறை நடைபெறவுள்ள கல்வி பொதுத்தராதர பரீட்சையை முன்னிட்டு மேலதிக வகுப்புக்கள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வு உள்ளிட்டவை எதிர்வரும் 23 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி தொடக்கம் தடை செய்வதாக பரீட் சைகள் திணைக்களம் அறிவித்துள் ளது.

மாதிரி வினாப்பத்திரம் அச்சிடு தல், விநியோகித்தல் முதலானவை யும் தடை செய்யப்படுவதாக பரீட் சைகள் திணைக்களம் அறிவித் துள்ளது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சை அடுத்த மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## பாடசாலைகளின் விஷேட நிகழ்வுகளை நடத்த தடை

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மீள அறிவிக்கும் வரையில் பாடசாலை களின் விஷேட நிகழ்வுகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்து மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி யமைச்சின் செயலாளரினால் அறிவிக் கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். மாநகர...

குறித்த வழக்கில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மாத்திரமே பிரதிவாதியாக பெயரி டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### கோத்தாவின்...

நன்மையைப் பெறுவதாக இருக்கலாம்.

1987 ஆம் ஆண்டின் இந்தோ இலங்கை உடன்படிக்கை மூலம் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் இந்தியா வடக்கு மற்றும் கிழக்கின் தமிழர்களுடன் நெருங்கி வருவதைத் தடுக்கலாம்.

பதிலுக்கு சீன சிறப்பிற்கு ஈடாக சீனர்களுக்கு இந்தியாவுக்கு எதிராக ஒரு முக்கிய புள்ளியைக் கொடுக்கலாம். ஆனால் அது எதுவாக இருந்தாலும் ஜனாதிபதி ராஜபக்ச நெருப்புடன் விளையாடுகிறார். ஆனால் சோகமான விசயம் என்னவென்றால், அவர் மேதனமுல்லானாவில் விளையாடவில்லை,

2009 ல் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இப்போது ஜனாதிபதியாக இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தின்படி இரண்டு முகங்களைக் கொண்டுள்ளார். இப்போது ஸ்டீபன் ராப் கூறுகையில், கோட்டாபாய "நான் அவர்களைக் கொன்றேன், அவர்களைக் கொன்றேன், அவர்களைக் கொன்றேன்" என்று ஒப்புக்கொண்டார் என்பதை கவனத்ததில் கொள்ளவும் சி.வி.விக்கினேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

### வடக்கு மாகாணத்தில்...

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர் களுடன் தொடர்புடையோர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை பணியாளர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அறிகுறிகளுடன் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு இன்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் கூறினார்.

### பாடசாலைக்கு...

இடம் ஒன்றுக்கு அழைத்த ஆசிரியர்கள், மேல் ஆடைகளை களையுமாறு அவர்களை அறிவுறுத்தியுள்ளனர்.

ஆசிரியர்களின் அறிவுறுத்தல் தொடர்பில்

மாணவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு இன்றி...

முறித்திருப்பேன் என, மேர்வின் சில்வா, அண்மையில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை என்னும் எழுச்சிப் போராட்டமானது, ஜனநாயக ரீதியான போராட்டமாகுமென்றார். ஆனால், இந்தப் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் வகையில், மேர்வின் சிலவா கருத்துகளைத் தெரிவித்துள்ளாரென குற்றஞ்சாட்டிய ரவிகரன், இவருடைய இவ்வாறான கருத்து கோமாளித்தனமாகவே இருக்கின்றதெனவும் கூறினார். "அத்துடன், பொலிஸ் சீருடையை தான் அணிந் திருந்தால், இந்தப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களின் கால்களை உடைத்திருப்பேன் என்கின்றார். அவ்வாறு உடைக்கக்கூடிய நிலையில் தமிழர்களின் கால்கள் இல்லை என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும். "இந்த நாட்டில் பொலிஸ் சீருடையில் இருந்தால், இவர் கூறுவதைப் போன்று மக்களின் கால்களை உடைக்கமுடியுமா?" எனவும், ரவிகரன் வினவினார். இவரது இத்தகைய கருத்து, பொலி ஸாரின் செயற்பாடுகளையும் அவர்களின் கடமைகளையும் கேலிசெய்வதாக அமைந்தாகத் தெரிவித்த அவர், நிச்சயமாக இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறினார்.

### இலங்கையிலும்...

கடந்த சனிக்கிழமை திரிபுராவிற்கு விஜயம் மேற் கொண்ட இந்திய உள்துறை அமைச்சர், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வெற்றிபெற்ற பின்னர் பா.ஜ.க.விற்கு சிறீலங்காவிலும் நேபாளத்திலும் அரசாங்கத்தை அமைக்கும் எண்ணமுள்ளது என குறிப்பிட்டார் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறீலங்காவிலும் நேபாளத்திலும் எங்களது கட்சியை விஸ்தரிக்க வேண்டும். அங்கு ஆட்சியை அமைப்பதற்காக வெற்றிபெறவேண்டும் எனவும் அமித்ஷா கூறியதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திரிபுரா முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்து குறித்து மத்திய அரசாங்கம் விளக்கம் அளிக்கவேண்டும் என திரிபுராவின் எதிர்கட்சி வேண்டு கோள் விடுத்துள்ளது.

முதலமைச்சருக்கு ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு குறித்து எதுவும் தெரியாது என குறிப்பிட்டுள்ள எதிர்கட்சி, அமித்ஷாவின் கருத்துக்கள் வெளிநாடு ஒன்றின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு சமம் எனவும் குறிப்பிட்டுள்ளது.



# ஐ.தே.க.இன் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ரணில் அறிவிப்பு?

ஐக்கியத் தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக, கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் பிரதி நிதித்துவப்படுத்தவுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக அவரை பெயரிட வேண்டும் என ஐக்கியத் தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனினும் ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானம் கிடைக்கும் வரையில் அந்த நடவடிக்கை தாமதமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த மாத இறுதிக்குள் குறித்த தீர்மானம் கட்சிக்கு அறியப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஒரே ஒரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை மாத்திரமே ஐக்கியத் தேசியக் கட்சிக்கு கிடைத்தது.

அந்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக பலரின் பெயர்கள் முன்னதாக முன்மொழியப்பட்டன.

இந்த நிலையில், அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட வேண்டுமென்றும் இணக்கம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு மேலும் 5 இலட்சம் தடுப்பூசிகள்

நாட்டு சனத் தொகையில் 9 மில்லியன் மக்களுக்கு வழங்குவதற்கான கொவிட் தடுப்பூசி தொகையில் முதல் கட்டமாக 5 இலட்சம் தடுப்பூசிகள் 7 நாட்களுக்குள் கிடைக்கவுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இன்று (15) காலை தெரண அருண நிகழ்ச்சில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் முதல் சாதாரண மக்களுக்கு தடுப்பூசியை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.,

அத்துடன் உலக சுகாதார அமைப்பினால் இலங்கைக்கு தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவை மார்ச் மாத ஆரம்பத்தில் கிடைக்கப்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் மேலும் 802 பேருக்கு கொரோனா
# 7 உயிரிழப்புகளும் பதிவு



இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் 802 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 75 ஆயிரத்து 654 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதிய கொரோனா நோயாளர்களில் 801 பேர் மினுவாங்கொட - பேலியகொட கொவிட் கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒருவர் வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு வருகை தந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மினுவாங்கொட - பேலியகொட கொவிட் கொத்தணிப் பரவலில் சிக்கிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 71 ஆயிரத்து 627 ஆக உயர்வடைந்துள்ளது.

இதனிடையே நேற்யை தினம் கொரோனா தொற்றுக்கு உள்ளான 865 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறுயுள்ளனர்.

இதனையடுத்து, கொவிட் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்த நோயாளர்களின் எண்ணிக்கையும் 68 ஆயிரத்து 696 ஆக காணப்படுகிறது.

தற்சமயம் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 561 பேர் சிகிச்சைப் பெற்று வருவதுடன், சந்தேகத்தின் பேரில் 598 நபர்கள் வைத்தியக் கண்காணிப்பிலும் உள்ளனர்.

இதேவேளை இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 07 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதி செய்துள்ளார்.

இதற்கமைவாக நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 397 ஆக அதிகரித்துள்ளது.

# அதி அபாய வலயங்களில் வசிக்கும் மக்களுக்கு இன்று முதல் தடுப்பூசி!



மேல் மாகாணத்தில் அதி அபாய வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த செயற்பாடுகள் இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடியவர்கள், அதிக ஆபத்துள்ள குழுக்கள் மற்றும் பொதுமக்களுடன் நெருக்கமாக பழகும் நபர்களை குறிவைத்து 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளை இலவசமாகப் பெற்ற பின்னர், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை இலங்கை தொடங்கியது.

அதன்படி, முதற் கட்டமாக சுகாதாரத் துறை, முப்படையினர், பொலிஸ் மற்றும் முன்கள ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, மீதமுள்ள 2 இலட்சத்து 50000 ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளை பொது மக்களுக்கு செலுத்த கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொறியில் சிக்கி தப்பிய சிறுத்தையால் பதற்றம்!





பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவ சீனா கொலை (செப்பல்ட்டன்) தோட்ட எல்லை பகுதியில் பொறியில் சிக்குண்ட சிறுத்தை ஒன்று இன்று (15.02.2021) திகதி அதன் கம்பிகளையும் அத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளமையினால் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் பதற்ற நிலை காணப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவ மேல் பிரிவு தோட்டத்தில் சீனாகொலை எல்லையில் இன்று காலை தேயிலை கொழுந்து பறிப்பதற்காக சென்ற தொழிலாளர்கள் சிறுத்தை சீறும் சத்தத்தினை கேட்டு அப்பகுதியில் பார்த்த போது ஐந்து அடி நீளமான சிறுத்தைப்புலி ஒன்று பொறியில் சிக்குண்டு தவிப்பதனை கண்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து தொழிலாளர்கள் கூச்சலிட்டு ஓடி பொலிஸாருக்கு தெரிவித்தனையடுத்து பொலிஸார் நல்லதண்ணீர் வன ஜீவராசி திணைக்களத்திற்கு தெரிவித்துள்ளனர்.

எனினும் வனஜீவராசிகள் அதிகாரிகள் வருவதற்கு முன் குறித்த சிறுத்தைப்புலி கம்பியினை அத்துக்கொண்டு காட்டுப் பகுதிக்கு ஓடியுள்ளது .

இதனால் இந்த சிறுத்தைப்புலி மீண்டும் வந்து மக்களை தாக்கலாம் என பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக அப்பகுதியில் உள்ள நாய்களை சிறுத்தைப்புலிகள் கொண்டு சென்று தின்றுவிடுவதாகவும் தேயிலை மலைகளில் சிறுத்தைப்புலிகளின் நடமாற்றம் காணப்படுவதாகவும் இது குறித்து உரிய அதிகாரிகளிடம் அறிவித்த போதிலும் இதுவரை பாதுகாப்பான நடவடிக்கைகள் எதுவம் பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தாங்கள் உயிரை கையில் பிடித்து கொண்டு தங்களுடைய தொழில் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது குறித்து உரியவர்கள் உரிய கவனமெடுத்து நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.